# தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

## மாவட்ட/ அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (ஐந்தாவது பட்டியல் - திருத்தம்)

### சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட/ அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோவை வடக்கு மாவட்டம்**

தலைவர் - ஜ. சாதிக் பாட்சா, 16, பள்ளி வீதி, கரும்புக் கடை, கோவை 641008.

துணைத் தலைவர் - கி. மனோகரன், 26-1, காந்தி நகர், காரமடை, கோவை 641104.

அமைப்பாளர் - **எஸ். கார்த்திக் குமார்,** 5/299-c ஆசிரியர் காலனி, கணுவாய், அஞ்சல் அலுவலகம் அருகில், கோவை 641108.

துணை அமைப்பாளர்கள் - டேவிட் பீட்டர், 15/16 தியாகராஜ, நகர் சுண்டக்காமுத்தூர், கோவை 641010. வி. பிரபாகரன், 10, அம்பிகா நகர், துடியலூர், கோவை. வி. பிரகாஷ், 177, குன்னத்தூர், குன்னத்தூர் புதூர் (po), S.S. குளம் (via), கோவை 641107. இரா. திலீப் குமார், 5/44 தேக்கம்பட்டி, சீளியூர் (வழி), மேட்டுப்பாளையம், கோவை 641113. சே. முகம்மது ரபி, 151, அண்ணாஜிராவ் ரோடு, மேட்டுப்பாளையம், கோவை 641301. திருமூர்த்தி, 2/133A, கோவனூர், நாயக்கன்பாளையம் அஞ்சல், கோவை 20. S.மகேஷ் பிரசாந்த், 2/242, தெற்கு வீதி, சோமையனூர், கோவை. E. ரங்கராஜ், 1/922, மத்தம்பாளையம், பிளிச்சி அஞ்சல், கோவை. குணசேகரன், 3/4, சாலை வேம்பு மேடுர், கெம்மாராம்பாளையம், மேட்டுப்பாளையம், கோவை. ஆர். மனோஜ் குமார், 45/58A அய்யாவு பாண்டி வீதி, சொக்கம்புதூர், கோவை-39. V. செல்வராஜ், 3/113, கிழக்கு வீதி, தொட்டிபாளையம், வெள்ளமடை, கோவை-64110. A. ஆயிஷா அக்பர், 9, ரெயின்போ என்க்கிளைவ், சுகுணாபுரம், கிழக்கு, மயில்கல், குனியமுத்தூர் போஸ்ட், கோயம்புத்தூர்- 641008. S. முகம்மது ரபி, 151, அண்ணா ஜிரா ரோடு, மேட்டுப்பாளையம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**கார்த்திகேய சிவசேனாபதி**
செயலாளர்,
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலுவின் தாயார் த.கௌரி அம்மாள் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மயிலை த.வேலு அவர்களது இல்லம் சென்று, அவரது தாயாரின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். அதுபோது அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் சென்று அஞ்சலி செலுத்தினர்.

# இனி வரும் தலைமுறைகளுக்கு

# வளமான - ஒளிமயமான - வருங்காலத்தை உருவாக்குவோம்!

## ‘யுமாஜின் தமிழ்நாடு 2024’ கருத்தரங்க நிறைவு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, பிப்.26-

**இனி வரும் தலைமுறைகளுக்கு வளமான – ஒளிமயமான வருங்காலத்தை உருவாக்குவோம் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியுள்ளார்.**

**‘யுமாஜின் தமிழ்நாடு 2024’ கருத்தரங்கு சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்றது. நேற்று முன்தினம் இந்த கருத்தரங்கின் நிறைவு விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது:

“திறமை, தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றுக்கான தளமாக விளங்கும் ‘யுமாஜின் தமிழ்நாடு 2024’ நிகழ்வின் நிறைவு விழாவில் உங்களிடையே உரையாற்றுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த விழாவைத் தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டை தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பிரமாண்டமான முறையில் ஒருங்கிணைத்துள்ளார். அவருக்கு என் வாழ்த்து களை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை நடத்தும் இந்த யுமாஜின் மாநாடு, உலக அளவில் புத்தாக்க முயற்சிகள் மிகுந்த கவனம் பெற்று வரும் வேளையில் தொழில்நுட்பம், தொழில்முனைவு மற்றும் திறமைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் மூலம் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருக்கும்.

**அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி!**

இந்த மாநாட்டில் உலகம் முழுவதிலுமிருந்து தொலைநோக்குச் சிந்தனையாளர்களும் தொழில் நிபுணர்களும் கலந்துகொண்டுள்ளனர். வருங்காலத்தில் இந்தியா அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும், வளங்குன்றா வளர்ச்சியையும் அடைவதற்கு நிறைய வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறது. மிக முக்கியமாக, இங்கு இளைய தலைமுறையினர் அதிக அளவில் பணியாற்றுகின்றனர்.

அடுத்த 25 ஆண்டுகளில், சுமார் 220 மில்லியனுக்கும் அதிகமான எண்ணிக்கையில் நாட்டின் இளைய தலைமுறையினருக்காகப் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டிய சூழல் இருக்கிறது. அப்போது வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் துறையில் புதிய திறன்கள் தேவைப்படும் சூழல் ஏற்படும். அந்தச் சவாலை நம்மால் சமாளிக்க முடிந்தால், நம் நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் வறுமைக் கோட்டுக்கு மேலே கொண்டு வந்துவிட முடியும்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் துறைகளில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ‘தி நியூயார்க் டைம்ஸ்’ இதழ் நம்மைப் பாராட்டியுள்ளது. இந்தியாவில் உள்ள மொத்த பெண் தொழிலாளர் சதவீதத்தில், சுமார் 42 சதவீதம் பேர் தமிழ்நாட்டில் உள்ளனர். ஒவ்வொரு துறையிலும் பாலின சமத்துவத்தை உறுதிசெய்வதில் தமிழ்நாடு அரசுக்கு இருக்கும் கடமையை எடுத்துக்காட்டுகிறது இது.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.2.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் இரண்டு நாட்கள் நடைபெற்ற UmagineTN தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டின் நிறைவு விழாவில் JIGSAW புத்தாக்க இணையதளத்தைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மேற்கு ஆஸ்திரேலிய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் ஆம்பர் ஜேட் ஆண்டர்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், இந்தியத் தொழில்நுட்ப கழகத்தின் இயக்குநர் காமகோடி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொள்கை வகுப்பாளர்கள் முதல் தொழிலதிபர்கள் வரை, தலைமைச் செயல் அலுவலர்கள் முதல் புத்தொழில் தொழில்முனைவோர் வரை, தொழில்நுட்ப வல்லுநர்கள் முதல் திறன் மேம்பாட்டாளர்கள், கல்வியாளர்கள் என பலருக்கும் புதிய சிந்தனைகள், புத்தாக்கம் மற்றும் புதிய கூட்டு முயற்சிகளுக்கான தளமாக யுமாஜின் விளங்குகிறது என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

கடந்த இரண்டு நாட்களில், 100க்கும் மேற்பட்ட நிபுணர்கள், 1000க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், 25க்கும் அதிகமான கருத்தரங்குகள், 10 ஆயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் மற்றும் 150க்கும் அதிகமான கண்காட்சியாளர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் மற்றும் டீப் டெக்னாலஜி, தொழில்நுட்பப் பாதுகாப்பு, கனெக்டட் இன்டெலிஜென்ஸ், வளங்குன்றா வளர்ச்சி, ஆடியோ விஷுவல் கேமிங் காமிக்ஸ் மற்றும் எக்ஸ்டென்டட் ரியாலிட்டி போன்ற துறைகளுக்கு இந்த யுமேஜின் மாநாட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. இந்தத் துறைகளில் எல்லாம் வருங்காலத்தில் நிறைய வாய்ப்புகள் தோன்றவுள்ளன.

**தனிநபர் சார்ந்த தகவல்கள் பாதுகாப்பு!**

கனெக்டட் இன்டெலிஜென்ஸ் எனும் தொழில்நுட்பத் துறை, மனிதர்களுக்கும் இயந்திரங்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்பும் ஒன்றாகத் திகழும். இதன் மூலம் நம்மால் தொழில்நுட்பங்களைச் சுலபமாகக் கையாள முடியும்.

தரவுகள் புதிய தங்கம் என்று சொல்லப்படுகிறது. தனிநபர் சார்ந்த மிக முக்கியமான தகவல்களைப் பாதுகாப்பதும், அவற்றை நேர்மையாகப் பராமரிப்பதும் உலகம் முழுவதும் உள்ள அரசுகளுக்குப் பெரிய சவாலாக விளங்கி வருகிறது.

இவற்றுக்கெல்லாம் தீர்வு காணும் நோக்கில் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு தங்களது அனுபவங்களையும் அறிவையும் பகிர்ந்து கொண்டுள்ள அனைத்து வல்லுநர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினைகள் தொடர்பான உரையாடல்களுக்கு உங்களது பங்களிப்பு மேலும் வளம் சேர்த்துள்ளன. வருங்காலத்தில் ஏற்படக் கூடிய வாய்ப்புகளுக்கு எங்களைத் தயார்படுத்தி உள்ளன.

இங்கு நடைபெற்ற கருத்தரங்குகள் மூலம் தமிழ்நாட்டின் பிரகாசமான, வளர்ந்து வரும் தலைமுறையினர் பெரிய அளவில் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த இளைய மனங்களை மேலும் திறனுள்ளவையாக மாற்றவும், அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ‘மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண்’ திட்டம் மூலம், உயர்கல்வியில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சுமார் 2.71 இலட்சம் மாணவிகள், மாதந்தோறும் ரூ.1,000 ஊக்கத் தொகையை அரசிடமிருந்து பெறுகிறார்கள்.

அந்தத் திட்டம் அடைந்திருக்கும் வெற்றியைத் தொடர்ந்து, மாணவர்களும் பயன்பெறும் விதத்தில் ‘தமிழ்ப் புதல்வன்’ எனும் திட்டம் மிக விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் விளிம்புநிலைப் பின்னணியில் இருந்து, அரசுப் பள்ளிகளில் படிக்கும் சுமார் 3 இலட்சம் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஊக்கத் தொகை வழங்கப்பட உள்ளது. அது அவர்களின் படிப்பு மற்றும் பாடப் புத்தகங்கள் வாங்கப் பயன்படும். இந்தத் திட்டத்துக்கு சுமார் 360 கோடி ரூபாய் செலவாகும்.

இதனுடன், ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் சுமார் 25 இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைப் பெற்று வருகிறார்கள். இந்தத் திட்டம் சுமார் 2,000க்கும் அதிகமான நிறுவனங்கள், 300க்கும் அதிகமான பயிற்சிகள் மற்றும் 200க்கும் அதிகமான பயிற்சியாளர்கள் ஆகியோரைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டரை ஆண்டுகளில் நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களில், சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணி வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

**தகவல் தொழில்நுட்ப புரட்சி!**

தொழில்துறையினர் எதிர்பார்க்கும் திறன்களை ‘நான் முதல்வன்’ திட்டம் வழங்குகிறது. மேலும் மாநில அரசின் கல்வி நிலையங்களில் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல்களும், வேலை வாய்ப்புக்குரிய பயிற்சிகளையும் நமது அரசு வழங்குகிறது. மாநிலத்தில் உள்ள 45 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை ‘இன்டஸ்ட்ரி 4.0’ எனும் நவீன நிலைக்கு உயர்த்தும் விதமாக, சுமார் ரூ.3,014 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் புத்தாயிரமாம் ஆண்டில் தொடங்கிய டைடல் பார்க், தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பப் புரட்சியைத் தொடங்கி வைத்தது.

உலகமயமாக்கலுக்குப் பிறகு ஏற்பட்ட தகவல் தொழில்நுட்பப் புரட்சியைப் புரிந்துகொண்ட டாக்டர் கலைஞர் அவர்கள், 1997 ஆம் ஆண்டு மாநில தகவல் தொழில்நுட்பக் கொள்கையை ஏற்படுத்தினார். அவரது வழியில் பயணிக்கும் நமது முதலமைச்சர் அவர்கள், தொழில்நுட்பப் புரட்சியை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்கிறார்.

சமீபத்தில், நமது முதலமைச்சர் அவர்கள் உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தினார். அதில் சுமார் 6 இலட்சத்து, 64 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

‘ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம்’ எனும் கனவோடு, நமது முதலமைச்சர் அவர்கள் தொழில்துறையின் முன்னேற்றத்துக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

நமது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையை மேம்படுத்த நமது ‘திராவிட மாடல் அரசு’ பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது. கோவையில், சுமார் ரூ.1,100 கோடி மதிப்பில் புதிய ஐ.டி.பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதே போல மதுரையில் ரூ.350 கோடி மதிப்பிலும், திருச்சியில் ரூ.345 கோடி மதிப்பிலும் டைடல் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுடன் கூடுதலாக, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நியோ டைடல் பூங்காக்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. இதனால் இந்த மூன்றாம் அடுக்கு நகரங்களில் சுமார் 13 ஆயிரத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் கருதி, அதனை மாநிலத்தின் வளர்ச்சிக்கு எப்படி எல்லாம் பயன்படுத்தலாம் என்பது குறித்து நமது அரசு சிந்தித்து வருகிறது.

**பாரம்பரியத்தை பாதுகாக்கும் தமிழ்நாடு அரசு!**

ஏ.ஐ. தொழில்நுட்பத்தை கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்துறை, ஆராய்ச்சி மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் பயன்படுத்த முன் வந்திருப்பதன் மூலம், மாநிலத்தில் புத்தாக்கம், வளங்களை ஆற்றலுடன் பயன்படுத்துதல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு ‘ஏ.ஐ. மிஷன்’ வழிகோலுகிறது.

1999 ஆம் ஆண்டு டாக்டர் கலைஞர் அவர்கள் ‘தமிழிணையம்99’ எனும் மாநாட்டை நடத்தினார். இப்போது நமது முதலமைச்சர் அவர்கள் ‘கணித்தமிழ்’ மாநாட்டை நடத்தியுள்ளார். டிஜிட்டல் காலத்தில் தமிழ்நாட்டின் வளமான மொழி பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும் பரவலாக்கவும் நமது அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை பிரபலப்படுத்தும் விதமாக அந்த மாநாடு அமைந்தது.

ஏ.ஐ. தொழில்நுட்பக் காலத்தில், கணினித்துறையில் தமிழ் மொழியைக் கொண்டு வருவதன் மூலம், நாம் நமது பண்பாட்டு அடையாளத்தை மட்டும் கொண்டாடவில்லை. மாறாக, உலக அளவிலான தொழில்நுட்பப் பரப்பில் பன்மைத்துவத்துக்கும், அனைவருக்கும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் நமது பங்களிப்பையும் வழங்கியிருக்கிறோம்.

புதிய தொழில்நுட்பங்களை வரவேற்பதிலும், அவற்றைக் கொண்டு புதிய நிறுவனங்களை ஏற்படுத்தவும், அவற்றுக்கு ஆதரவளிக்கவும் தமிழ்நாடு எப்போதுமே முன் நிற்கிறது. தமிழ்நாடு வழங்கும் அந்த எல்லையற்ற வாய்ப்புகளை நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள அனைவரையும் அழைக்கிறேன்.

அறிவுமிக்க மனங்கள், திறன்மிக்க மனித வளம், அமைதியான சூழல் ஆகியவற்றைக் கொண்டுள்ள தமிழ்நாடு, உங்களது நிறுவனத்தைத் தொடங்கவும் விரிவுபடுத்தவும் தகுந்த இடம் என்பதை இங்கே பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

நீங்கள் ஏ.ஐ., டீப் டெக், சைபர் செக்யூரிட்டி, ஏ.வி.ஜி.சி அல்லது வேறு ஏதேனும் தொழில்நுட்பம் சார்ந்து இயங்கி வரும் நிறுவனமாக இருந்தாலும் உங்கள் அனைவரையும் இரு கரங்கள் விரித்து ‘வருக வருக’ என்று வரவேற்கிறது தமிழ்நாடு.

**தொலைநோக்கு சிந்தனை கொண்ட முதலமைச்சர்!**

இது வெறுமனே அழைப்பு மட்டுமல்ல. வாய்ப்புகளும், புதுமைகளும், ஒப்பீடு இல்லாத ஆதரவையும் வழங்கும் ஓர் இடமாக தமிழ்நாடு திகழும் என்ற உறுதியையும் நான் வழங்குகிறேன்.

தனது தலைமையில், தமிழ்நாட்டை புதிய தொழில்நுட்பங்களின் வழியில் நடத்திச் செல்வதற்காக தொலைநோக்குச் சிந்தனை கொண்ட நமது முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது திறமையான ஆட்சியின் கீழ், புதுமை, தொழில்முனைவு மற்றும் தொழில்நுட்பத் திறன் ஆகியவற்றில் தமிழ்நாடு வேகமாக வளர்ந்து வருகிறது.

புதிய கூட்டு முயற்சிகள், புதுமையான தொழில் திட்டங்கள் மற்றும் முற்போக்குச் சிந்தனை ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாக இந்த ‘யுமாஜின் தமிழ்நாடு 2024’ மாநாடு திகழ்ந்திருக்கிறது.

இந்தப் நிறைவு விழாவில், யுமாஜின் மாநாடு வழங்கியிருக்கும் உந்து தலை முன்னெடுத்துச் செல்வதோடு, தொழில்நுட்பம், தொழில்முனைவு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் எல்லைகளை நாம் மேலும் விரிவுபடுத்த உறுதி எடுத்துக்கொள்வோம்.

இனி வரும் தலைமுறைகளுக்காக வளமான, ஒளிமயமான வருங்காலத்தை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து உழைப்போம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பழனிவேல் தியாகராஜன், ஆஸ்திரேலிய அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் ஆம்பர் ஜேட் சாண்டர்சன், அதிகாரிகள் தீரஜ் குமார், அனீஷ் சேகர், பி.பிரவீன் நாயர், ஆஸ்திரேலிய துணைத் தூதர் சிலாய் ஸாக்கி, ஜெர்மன் துணைத் தூதர் மிக்கேலா குக்லெர், ஐ.ஐ.டி.சென்னை இயக்குநர் டாக்டர் வி.காமகோடி, சி.ஐ.ஐ. தலைவர் சங்கர் வாணவராயர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.